### பாளை சாரதா கல்லூரியில்

# வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி




▶ பாளை சாரதா கல்லூரியில் நடந்த வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

**நெல்லை,அக்.10:** பாளை சாரதா கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு சிறப்பு பட்டிமன்றம் நடந்தது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலாளர் யதீஸ்வரி சரவணபவ பிரியா அம்பா தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் மலர்விழி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக பயிற்சி சப்கலெக்டர் சிவகுரு பிரபாகரன் பங்கேற்று வாக்காளர் விழிப்புணர்வு பட்டிமன்றத்தை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து விழிப்புணர்வு கட்டுரை, கோலப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பேசினார். பயிற்சி துணை ஆட்சியர்கள் மயில், அனிதா, ஆகியோர் வாக்காளர் பெயர், முகவரி திருத்தம், 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து பேசினர்.

தொடர்ந்து ஆசிரியர் கணபதி சுப்பிரமணியன் தலைமையில் 100 சதவீதம் வாக்களிப்பு நடைபெற துணைநிற்பது கனிவான அறிவுரையா? கடுமையான சட்டமா? என்ற தலைப்பில் விழிப்புணர்வு பட்டிமன்றம் நடந்தது. இதில் 100 சதவீதம் வாக்களிப்பு நடைபெற துணை நிற்பது கனிவான அறிவுரையே என நடுவர் தீர்ப்பு கூறினார். நிகழ்ச்சியில் பாளை தாசில்தார் பால சுப்பிரமணியன், நாங்குநேரி துணை வட்டாட்சியர் குமார், செஞ்சிலுவை சங்க நிர்வாகி சபேசன், கல்லூரி குடிமக்கள் நுகர்வோர் மன்ற அலுவலர் மில்கா விஜயன் மற்றும் மாணவிகள், பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். மேலும் மாணவிகளுக்கு வாக்குபதிவு இயந்திரம் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. வாக்காளர் விழிப்புணர்வு பணி ஒருங்கிணைப்பாளர் நல்நூலகர் முத்துகிருஷ்ணன் நன்றி கூறினார்.